



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"


FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓ DIGITAL MARKETING
✓ WEB DEVELOPMENT
✓ SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 300 | 23.04.2026 | THURSDAY | CHITHIRAI: 10 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 300 | 23.04.2026 | வியாழக்கிழமை | சித்திரை : 10 | விலை : ரூ.5/–

# 'விழிப்புடன் இருப்பது அவசியம்'

## பயங்கரவாதத்துக்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது: பிரதமர் மோடி



புதுடில்லி: ஏப்.23-

எந்த வகையிலும் பயங்கரவாதத்திற்கும் இந்தியா ஒருபோதும் அடிபணியாது என பிரதமர் மோடி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில், 26 பேர் பலியான நினைவு தினத்தையொட்டி பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: கடந்த ஆண்டு இதே நாளில், பஹல்காமில் நடைபெற்ற கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலில் பலியான அப்பாவி உயிர்களை நாம் நினைவுகூர்கிறோம். அவர்கள் ஒருபோதும் மறக்கப்பட மாட்டார்கள்.

இந்த இழப்பைத் தாங்கிக்கொண்டு மீண்டு வர முயலும் குடும்பங்கள் பற்றிய சிந்தனைகள் எனது மனதில் இருக்கிறது. ஒரு தேசமாக, துயரத்திலும் உறுதியிலும் நாம் ஒன்றுபட்டு நிற்கிறோம். எந்த வகையிலும் பயங்கரவாதத்திற்கும் இந்தியா ஒருபோதும் அடிபணியாது. பயங்கரவாதிகளின் சதித் திட்டங்கள் ஒருபோதும் வெற்றி பெறாது. இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெறும்: பிரச்சாரத்தை நிறைவு செய்த உதயநிதி திட்டவட்டம்



சென்னை: ஏப்.23-

தமிழகத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் இந்த ஜனநாயகப் போரில், 234 தொகுதிகளிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றி பெற்று, மீண்டும் 'திராவிட மாடல் 2.0' ஆட்சி அமையும் என திமுக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்தார்.

தமிழகத்தில் நாளை சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது. இத்தேர்தலில் 2வது முறையாக சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் போட்டியிடுகிறார்.

அவர் நேற்று தொகுதியில் தீவிரப் பரப்புரையில் ஈடுபட்டார். வீதி வீதியாகச் சென்று மக்களிடம் வாக்கு சேகரித்தார். அப்போது அவருக்கு மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதையடுத்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த மார்ச் 30ல் காஞ்சிபுரத்தில் தொடங்கி, ஏப்ரல் 21 வரை 23 நாட்களில் 135 தொகுதிகளில் தீவிரப்பரப்புரை மேற்கொண்டோம். சென்ற இடமெல்லாம் திமுகவின் மக்கள் நலத்திட்டங்களுக்குப் பெரும் வரவேற்பு இருப்பதை நேரில் கண்டேன்.

'விடியல் பயணம்', 'மகளிர் உரிமைத் தொகை' போன்ற திட்டங்கள் மக்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளன. தமிழகத்தை ஆக்கிரமிக்கத் துடிக்கும் பாசிச பாஜகவுக்கும், அதற்குப் பாதை அமைத்துக் கொடுக்கும் பழனிசாமிக்கும் பாடம் புகட்ட மக்கள் தயாராகி விட்டார்கள்.

மகளிர் உரிமைத் தொகை ரூ.2,000 ஆக உயர்வு, இல்லத்தரசிகளுக்கு ரூ.8,000 மதிப்பிலான கூப்பன்கள், கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் போன்ற திமுகவின் வாக்குறுதிகள் மக்களிடம் பெரும் நம்பிக்கையை விதைத்துள்ளன.

சொன்னதைச் செய்யும் முதல்வர் மீதான மதிப்பு பன்மடங்கு உயர்ந்துள்ளது. தமிழகத்தின் அரசியல் குரலை நெரிக்க முயன்ற தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்த்துப் போராடி, அதை நாடாளுமன்றத்தில் வீழ்த்தியது நமது தலைவரின் சரித்திர வெற்றி. இந்த வெற்றி சட்டமன்றத் தேர்தலிலும் எதிரொலிக்கும்.

பாசிச சக்திகளையும், அதிமுக அடிமைக் கூட்டத்தையும் வாக்கு ஆயுதத்தால் வீழ்த்துவோம். மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை முடியும் வரை திமுகவினர் விழிப்புடன் பணியாற்றி, 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' எனும் குரல் மீண்டும் ஒலிக்கச் செய்வோம்" எனத் தெரிவித்துள்ளார்.




கட்டப்பா:

ஒரு ஓட்டுப் போடலன்னா என்ன ஆகப்போகுது செல்லப்பா?

செல்லப்பா:

நூறு ஓட்டுல தோற்க வேண்டியவர் ஒரு ஓட்டுல ஜெயிச்சிருவார் கட்டப்பா... அதான் ஜனநாயகத்தோட சக்தி.

மறக்காம

ஓட்டுப் போடுங்கள்!

## திமுகவினருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



சென்னை: ஏப்.23-

"தமிழகத்தில் எதிரிகளுக்கும், அவர்களின் அடிமைகளுக்கும் இடமில்லை; தேர்தலில் விழிப்புடன் செயல்படுங்கள் " என திமுகவினருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அவரது கடிதம்: 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் பயன் தந்திருப்பதாலும், பாஜ தலைமையில் அதிமுக மற்றும் சில கட்சிகள் இணைந்துள்ள தேசிய ஜனநாயக கூட்டணியால், அதன் மத்திய அரசால், தமிழகம் தொடர்ந்து வஞ்சிக்கப்படுவதாலும், அடிமை அதிமுகவுக்கும் அதனுடன் உள்ள கட்சிகளுக்கும் ஓட்டளித்தால் அது நேரடியாக பாஜவுக்கு போடும் ஓட்டு தான் என்பதை உணர்ந்திருப்பதாலும், பீஹாரைப் போல தமிழகத்தையும் பாஜ பின்வாசல் வழியாக கபளீகரம் செய்துவிடும் என்பதாலும், பாஜ தலைமையில் அதிமுக இணைந்துள்ள கூட்டணியை முறியடித்து, திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கே ஓட்டளிப்போம் என்பதே தமிழக வாக்காளர்களின் உறுதியான முடிவு.

மக்கள் நம்முடன் இருக்கிறார்கள். தமிழகத்தின் எதிரிகளுக்கும் அவர்களின் அடிமைகளுக்கும் இங்கே இடமில்லை என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். நம் அரசியல் எதிரிகள் பரப்புகின்ற அவதூறுகளைத் தமிழக மக்கள் புறந்தள்ளி, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்திட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர்.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணிக்குத்தான் ஓட்டளிக்க வேண்டும் என்ற உறுதியையும் மேற்கொண்டுள்ளனர். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து வெளிப்பட்ட திமுகவினரின் அயராத உழைப்பு, ஓட்டுப்பதிவு நாளான ஏப்ரல் 23ம் தேதியன்றும் விழிப்புடன் தொடர்ந்திட வேண்டும்.

வாக்குச்சாவடி முகவர்கள் (பூத் ஏஜெண்ட்டுகள்) ஓட்டுப்பதிவு நடைபெறுவதற்கு 90 நிமிடங்களுக்கு முன்பாகவே வாக்குச்சாவடிக்கு செல்ல வேண்டும். பூத் ஏஜெண்ட்டுகள் எக்காரணத்தை முன்னிட்டும், ஆரம்பத்திலேயே தேர்தல் அதிகாரி கொடுக்கும் 17சில் கையொப்பமிடக் கூடாது. ஓட்டுப்பதிவு முடிந்தவுடன் சரிபார்த்த பிறகே, கையொப்பம் இட்டு நகல் பெற வேண்டும்.

ஓட்டுப்பதிவு நேரம் முடிவடையும் தறுவாயில் வரிசையில் நிற்கும் அனைத்து வாக்காளர்களுக்கும் டோக்கன் வழங்கப்படுவதை உறுதிசெய்து, பின்பு சிஹி பட்டனில் சிறீஷீமீ என்று தேர்தல் அதிகாரி அழுத்துவதை உறுதிசெய்ய வேண்டும். வாக்குச்சாவடி முகவர்கள் படிவம்17சி உள்ளிட்ட அனைத்துப் படிவங்களிலும் தேர்தல் அதிகாரியுடன் சேர்ந்து கையொப்பம் இடவேண்டும்.

வாக்குச்சாவடியில் திமுகவினர் கண்ணியமான முறையிலும், கவனமான வகையிலும் தங்கள் பணியை மேற்கொண்டு, நமக்கு ஆதரவான ஒரு ஓட்டு கூட விடுபடாதபடி செயல்பட வேண்டும். 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தல் என்பது தமிழகத்தின் வளர்ச்சி தொடர்வதற்கான திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவதற்கான களம்.

தமிழகத்தின் உரிமைகளைக் காப்பதற்கான களம். தமிழகத்திற்கும் தமிழர்களுக்கும் துரோகம் செய்பவர்களையும் அவர்களுக்குத் துணை போகிறவர்களையும் ஒரு சேர வீழ்த்துகிற களம். வெற்றி நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கே; ஒன்றாக விழிப்புடன் பணியாற்றி வெல்வோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம்: புகார் தெரிவிக்க உதவி எண்கள் அறிவிப்பு

சென்னை: ஏப்.23-

ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூல் குறித்து புகார் தெரிவிக்க உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து போக்குவரத்து ஆணையர் கிரண் குராலா வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவை தேர்தல் ௹ 2026, நாளை 23ம் தேதி அன்று வாக்குப்பதிவு நடைபெறுவதை முன்னிட்டு, ஏப்.21ம் தேதி முதல் 26ம் தேதி வரை மக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால், அதனைத் தடுக்க தமிழகம் முழுவதும் வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் அடங்கிய சிறப்புக்குழு அமைக்கப்பட்டு, அவ்வாறு இயங்கும் ஆம்னி பேருந்துகளை தீவிரமாக சோதனை செய்து அனுமதி ரத்து போன்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக தெரியவந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கைபேசி எண்கள் மூலம், வாட்ஸ் ஆப், குறுஞ்செய்தி குரல் பதிவு மூலமாக புகார் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை 1800 425 6151, இணைப்போக்குவரத்து ஆணையரகங்கள் சென்னை (வடக்கு) 99442 53404, சென்னை (தெற்கு) 97905 50052, மதுரை 90953 66394, கோவை 91235 93971, துணைப் போக்குவரத்து ஆணையரகங்கள் விழுப்புரம் 96773 98825, வேலூர் 98400 23011, சேலம் 78456 36423, ஈரோடு 80569 40040, திருச்சி 90660 32343, விருதுநகர் 90257 23800, திருநெல்வேலி 96981 18011, தஞ்சாவூர் 95850 20865 ஆகிய எண்களில் புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் ரூ.1,262 கோடி மதிப்பில் பணம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல்: அர்ச்சனா பட்நாயக்




சென்னை: ஏப்.23-

தமிழகத்தில் (ஏப்.21) மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த நிலையில், இதுவரை ரூ.1,262 கோடி மதிப்பில் பணம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். இதில் ரொக்கப் பணம் மட்டும் ரூ.543 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இதுவரை 4.18 லட்சம் தபால் வாக்குகள் பதிவாகி உள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று (ஏப்.23) ஒரே கட்டமாக நடைபெற உள்ள நிலையில், தேர்தலை ஒட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், "தமிழகத்தில் தேர்தல் பணியில் உள்ள அரசு ஊழியர்கள் இன்று வரை தபால் ஓட்டுக்களை போட முடியும். இதுவரை 4,18,541 வாக்குகள் போடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 33,133 இடங்களில் மொத்தம் 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 249 மாதிரி வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெண் பணியாளர்கள் நடத்தும் வாக்குச்சாவடிகள் 325 ஆக உள்ளது, இளைஞர்கள் மட்டுமே நடத்தும் வாக்குச்சாவடிகள் 79 ஆக உள்ளது. 5,949 வாக்குச்சாடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக 1,06,418 வாக்குச்சாவடி இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளன. இதேபோல், 75,064 கட்டுப்பாட்டு கருவிகளும், 75,064 விவி பேட் கருவிகளும் கையிருப்பில் உள்ளன. தேர்தல் பணிக்கு போதிய அளவு இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளன. வாக்குச்சாவடி இயந்திரங்கள் மற்றம் கன்ட்ரோல் யூனிட் ஆகியவற்றை பொருத்தவரை 20 சதவீதம் அளவுக்கு கூடுதலாக உள்ளன. விவிபேட் 30 சதவீதம் அளவுக்கு கூடுதலாக கையிருப்பில் உள்ளது.

வாக்குப்பதிவு மையங்களில் 3 லட்சத்து 60 ஆயிரத்து 68 அதிகாரிகள் பணியில் இருப்பார்கள். பாதுகாப்புப் பணிகளில் மொத்தம் 83,875 காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். கால் சென்டர் (எண் 1950), மீடியா கண்காணிப்பு, செலவு கண்காணிப்பு, வாக்குப்பதிவு கண்காணிப்பு என மொத்தம் 4 கட்டுப்பாட்டு அறைகள் முழு வீச்சில் செயல்பட்டு வருகின்றன.

தேர்தலை ஒட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு பணிகள் காரணமாக இதுவரை ரூ.1,262 கோடி மதிப்பில் தங்கம், மதுபானங்கள், பரிசுப் பொருட்கள், ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவற்றில், ரூ.543 கோடி அளவுக்கு ரொக்கமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சமூக ஊடக பதிவுகள் தொடர்பாக 243 விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. 163 புகார்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2,180 தவறான சமூக ஊடக பதிவுகளின் யுஆர்எல் பிளாக் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு தரப்புகளில் இருந்து 5,634 புகார்கள் பெறப்பட்ட நிலையில், அவற்றில் 17 புகார்கள் நிலுவையில் உள்ளன. அவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மே 4ம் தேதி மொத்தம் 62 மையங்களில் வாக்குகள் எண்ணப்பட உள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்" என்றார்.

# 3 நாட்கள் தொடர் விடுமுறை: டாஸ்மாக் கடைகளில் ரூ.400 கோடிக்கு மது விற்பனை




சென்னை, ஏப்.23-
தேர்தலையொட்டி 3 நாட்கள் தொடர் விடுமுறை விடப்பட்டதால் நேற்று முன்தினம் டாஸ்மாக் கடைகளில் ரூ.400 கோடிக்கு மது விற்பனை நடைபெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவுநடைபெறுகிறது. மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இந்நிலையில் மாநிலம் முழுவதும் டாஸ்மாக் மதுக்கடைகள் தேர்தலுக்கு முன்பாக ஏப் .21 முதல் 23ம் தேதி வரை 3 நாட்களும், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மே 4ம் தேதியும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தொடர்ந்து 3 நாட்கள் மதுக்கடைகள் மூடப்படுவதால், நேற்று முன்தினமே மதுப்பிரியர்கள் 3 நாட்களுக்கும் சேர்த்து மதுபாட்டிகளை வாங்கிச் சென்றனர். இதனால் நேற்று முன்தினம் மட்டும் ரூ.400 கோடிக்கு மது விற்பனை நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.மேலும் ஒருசில இடங்களில் பெட்டி பெட்டியாக வாங்கிச் சென்றனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது ரூ.320 கோடிக்கு மது விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது கூடுதலாக ரூ.80 கோடிக்கு விற்பனை நடைபெற்றுள்ளது.இதுகுறித்து டாஸ்மாக் அதிகாரிகள் கூறும்போது, “தமிழகம் முழுவதும் நாளொன்றுக்கு சராசரியாக ரூ.150 கோடிக்கு மது விற்பனை நடைபெறும். 3 நாள் மூடப்படுவதால் விற்பனை அதிகரித்துள்ளது வழக்கமானதுதான். ஒரு நபருக்கு அதிகபட்சம் 6 ஃபுல், குவாட்டர் என்றால் 24 பாட்டில்கள் அதாவது ஒரு பெட்டி மட்டுமே விற்கப்படும்.இந்த அளவை மீறி விற்பனை செய்யப்பட்டிருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் கள்ளத்தனமாக மது விற்பதை தடுக்க கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது” என்றனர்.

# ஹார்முஸ் ஜலசந்தியில் 2 கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் அமைதிப் பேச்சு தொடங்குவதில் சிக்கல்



தெஹ்ரான், ஏப்.23-
போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அமெரிக்கா ஈரானுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கு சிக்கலை ஏற்படுத்தும் வகையில், இன்று ஹார்முஸ் ஜலசந்தியில் இரண்டு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பிரிட்டிஷ் ராணுவம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார். போர் நிறுத்த நீட்டிப்பு குறித்த ட்ரம்ப்பின் அறிவிப்புக்கு ஈரான் இன்னும் பதிலளிக்கவில்லை. அதேநேரத்தில், உடன்பாடு எட்டப்படாவிட்டால் மீண்டும் சண்டையைத் தொடங்கத் தயாராக இருப்பதாக இரு நாடுகளும் எச்சரித்துள்ளன.

இந்தச் சூழலில், பிரிட்டிஷ் ராணுவத்தின் கடல்சார் வர்த்தக செயல்பாடுகள் (UKMTO) மையம், ஈரானின் துணை ராணுவப் படையான புரட்சிகர காவலர் படை (IRGC), இன்று காலை 7:55 மணியளவில் ஹார்முஸ் ஜலசந்தியில் ஒரு சரக்கு கப்பலைத் தாக்கி சேதப்படுத்தியதாக தெரிவித்தது.

துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்பு ஈரான் ராணுவம், கப்பலுக்கு எச்சரிக்கை விடுக்கவில்லை என்றும் பிரிட்டிஷ் ராணுவம் கூறியது.

அதிர்ஷ்டவசமாக, இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. மேலும் இந்தத் தாக்குதலால் எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

இரண்டாவதாக ஒரு சரக்குக் கப்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு கடலில் நிறுத்தப்பட்டதாக பிரிட்டிஷ் ராணுவம் தெரிவித்தது. அந்தக் கப்பலுக்கும் எந்தச் சேதமும் ஏற்படவில்லை என்று அறிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த 19ல் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் ஈரானின் தவுஸ்கா சரக்கு கப்பலை அமெரிக்க கடற்படை கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து டிபானி என்று பெயரிடப்பட்ட மற்றொரு ஈரானிய எண்ணெய் கப்பலை அமெரிக்க கடற்படை நேற்று கைப்பற்றியது. இதையடுத்து, ஈரானின் சரக்கு, எண்ணெய் கப்பல்களை கைப்பற்றுவது போர் நிறுத்த மீறல் ஆகும் என்று அந்த நாட்டு தலைவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

கடந்த பிப்ரவரி 28ம் தேதி முதல் அமெரிக்கா இஸ்ரேல் கூட்டுப் படைகள் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈரானும் இஸ்ரேல் மற்றும் வளைகுடா பகுதிகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. கடந்த 8ம் தேதி இருதரப்புக்கு இடையே 2 வாரங்களுக்கு போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டது. இதனிடையே கடந்த 11, 12ம் தேதிகளில் அமெரிக்கா ஈரான் பிரதிநிதிகள் இடையே பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

இதைத் தொடர்ந்து இஸ்லாமாபாத்தில் 2ம் சுற்று பேச்சுவார்த்தையை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அணு ஆயுதம், ஹார்முஸ் ஜலசந்தி கட்டுப்பாடு, லெபனான் போர் நிறுத்தம் உள்ளிட்ட விவகாரங்களில் இரு தரப்புக்கும் இடையே ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. இதனால் 2ம் சுற்று பேச்சுவார்த்தை தள்ளி வைக்கப்பட்டு வருகிறது கவனிக்கதக்கது.

# மேற்கு வங்கத்தில் செயல்பாடுகளை நிறுத்திய ஐபேக்




புதுடெல்லி, ஏப்.23-
மேற்கு வங்கத்தில் ஐபேக் நிறுவனம், முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் பிரச்சார ஆலோசனைகளை வழங்கி வருகிறது

இந்நிலையில் நிலக்கரி ஊழல் தொடர்பான சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கில் கொல்கத்தாவில் உள்ள ஐபேக் அலுவலகத்தில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. இச்சூழலில் ஐபேக் தனது ஊழியர்களுக்கு அனுப்பியுள்ள ஒரு மின்னஞ்சலில் மேற்கு வங்கத்தில் அடுத்த 20 நாட்களுக்கு பணிகளை நிறுத்தி வைக்க நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கு வங்க பேரவைக்கு 2 கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில் ஐபேக் தனது செயல்பாடுகளை நிறுத்துவதால் திரிணமூல் காங்கிரஸின் தேர்தல் பிரச்சாரம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. ஐபேக், வாக்குச்சாவடி அளவில் தரவுகளை சேகரித்து, அதன் அடிப்படையில் தேர்தல் பிரச்சார வியூகங்களை வகுத்து தருகிறது. இந்தப் பணிகள் அனைத்தும் ஏற்கெனவே நிறைவடைந்து விட்டதாக திரிணமூல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், வாக்குப் பதிவு நாளில் வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்துச் சென்று, அவர்கள் வாக்களிப்பதை உறுதி செய்வது கடினமாக அமையும் வாய்ப்புகள் உள்ளன. திரிணமூல் ஆதரவாளர்கள் எங்கு வசிக்கின்றனர் என்பது குறித்த தரவுகளும் ஐபேக் வசம் உள்ளது இதற்கு காரணமாக கூறப்படுகிறது. கடந்த சில வருடங்களாக முதல்வர் மம்தா அரசின் திட்டங்களை செயல்படுத்தும் பணியை ஐபேக் நிறுவனமே செய்து வந்தது. இதற்கு அத்திட்டங்களை அந்நிறுவனமே வடிவமைத்தது காரணம் ஆகும்.

இந்நிலையில் ஐபேக் அலுவலர்கள் யாரும் தங்கள் வேலையை இழக்க மாட்டார்கள் என்றும், அனைவருக்கும் தங்கள் கட்சி ஊதியம் வழங்கும் எனவும் மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார். அதே சமயம், "ஐபேக் முழுமையாக மூடப்படவோ அல்லது அதன் அலுவலர்கள் எவரும் கைது செய்யப்படவோ இல்லை. ஐபேக் மையக் குழுவின் பணி திரிணமூல் கட்சிக்காக தொடருகிறது. அதன் அலுவலர்கள் வீடுகளிலிருந்தே பணியாற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்" என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.




# கொடைக்கானல் மலை கிராமங்களுக்கு குதிரைகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட வாக்குபதிவு இயந்திரங்கள்

பழநி, ஏப்.23-
சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் கொடைக்கானலில் மலைக்கிராமங்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குதிரைகள் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் தீவிரமாக நடைபெற்று வர கூடிய சூழலில், பழநி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொடைக்கானல் பெரிய பகுதியாக இருக்கிறது.

கொடைக்கானலை பொறுத்த வரை கொடைக்கானல் நகரம் மட்டுமல்லாது, நகரை சுற்றி ஏராளமான மலை கிராமங்கள் அமைந்து உள்ளன. அதிலும் குறிப்பாக உரிய சாலை வசதிகள் இல்லாத மலைக்கிராமங்கள் இருக்கின்றன. சாலை வசதிகள் இல்லாத மலை கிராமங்களுக்கு வாக்கு பதிவு செய்ய கூடிய இயந்திரங்களான ணிகூஷிவி மெஷின்கள், விவிபேட் உள்ளிட்டவற்றை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன், பழநியிலிருந்து அனுப்பி வைத்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

வாக்கு பதிவிற்கு தேவையான இயந்திரங்கள் அனைத்தும் குதிரைகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. உதாரணமாக வெள்ளகெவி உள்ளிட்ட உரிய சாலை வசதி இல்லாத, மிகவும் செங்குத்தான மற்றும் கரடுமுரடான பாதைகளைக் கொண்ட பகுதிகளுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் விவிபேட் (VVPAT) இயந்திரங்கள் குதிரைகள் மூலம் கொண்டு செல்லப்படுவது வழக்கமான ஒன்று. குதிரைகள் மேல் வைத்துக் கட்டி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், அழியாத மை மற்றும் வாக்குப் பதிவின்போது பயன்படுத்தப்படும் பல்வேறு படிவங்கள் கொண்டு செல்லப்பட்டன.

நாளை வாக்குப்பதிவு முடிந்த பிறகு இரவுக்கு மேல் மீண்டும் இயந்திரங்கள் பழநிக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மலை உச்சியில் உள்ள தொலைதூர கிராமங்களுக்கு வாகனங்கள் செல்ல முடியாத சூழலில், இது போன்ற பாரம்பரிய மற்றும் மாற்று வழியை தேர்தல் ஆணையம் பயன்படுத்துகிறது.




# “மகளிர் இடஒதுக்கீடு; எதிர்க்கட்சிகள் மீது பிரதமர் பொய் புகார்” கார்கே கண்டனம்

சென்னை, ஏப்.23-
‘மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை எதிர்க்கட்சிகள் தோற்கடித்ததாகப் பிரதமர் மோடி பொய் கூறிமக்களை திசைதிருப்புகிறார்’’ என்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனா கார்கே குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்ததை மறைத்து, மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை எதிர்க்கட்சிகள் எதிர்ப்பதாக மோடி கூறுவது அப்பட்டமான பொய். மகளிர் இடஒதுக்கீடு மசோதா 2023ம் ஆண்டிலேயே நிறைவேற்றப்பட்டுவிட்டது, அதற்கு நாங்களும் ஆதரவு அளித்தோம். இம்மசோதாவை அப்போதே நாங்கள் அமல்படுத்தக் கோரியபோது, ‘மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுவரையறை முடிந்த பின்னரே சாத்தியம்’ என பிரதமர் கைவிரித்தார். ஆனால் இப்போது எதிர்க்கட்சிகள் மீது பழிபோடுகிறார்.அரசியல் நாடகம்: உண்மையில், இம்மசோதாவில் இணைக்கப்பட்டுள்ள ‘தொகுதி மறுவரையறை’ அம்சமே தென்னிந்திய மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கும் என்பதால் அதை எதிர்க்கிறோம். பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்க உண்மையிலேயே மோடிக்கு எண்ணம் இருந்தால், தற்போதைய 543 தொகுதிகளிலேயே 33 சதவீத இடஒதுக்கீட்டை வழங்கலாம். பாஜக அரசுக்கு பெண்கள் மீதான அன்பல்ல, வெறும் அரசியல் நாடகம்.

மோடியும் அமித் ஷாவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களைக் கவிழ்ப்பதையே வேலையாகக் கொண்டுள்ளனர். சிபிஐ, அமலாக்கத் துறை மூலம் எதிர்க்கட்சியினரை மிரட்டி ஜனநாயகத்தைச் சீரழிக்கிறார்கள். தமிழகம், பெரியார், அண்ணா, காமராஜர் மற்றும் கலைஞர் ஆகியோரின் கொள்கை வழி வந்த மண். அண்ணாவின் பெயரில் கட்சி நடத்தும் அதிமுக, சமத்துவத்தை நம்பாத பாஜகவுடன் இணைவது அண்ணாவின் தத்துவங்களுக்குச் செய்யும் துரோகம்.

தமிழகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க காங்கிரஸ் திமுக கூட்டணியை மக்கள் வலுப்படுத்த வேண்டும். மாற்றாக வரும் சில கட்சிகள் மதச்சார்பற்ற வாக்குகளைப் பிரித்து, மறைமுகமாக பாஜகவுக்கே உதவும். எனவே, மக்கள் விழிப்புடன் இருந்து எங்கள் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தமிழக சட்டபேரவை தேர்தலையொட்டி புதுச்சேரியில் 443 மதுக்கடைகளுக்கு சீல்

## சரக்கை பதுக்கி விற்ற 7 பேர் சிக்கினர்



புதுச்சேரி, ஏப்.23-
தமிழக சட்டப்பேரவை பொதுத்தேர்தல் நாளை நடைபெறுகிறது. தேர்தலை அமைதியாக நடத்த தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் ஒருபகுதியாக தமிழகத்தை ஒட்டியுள்ள புதுச்சேரியிலும் 3 நாட்கள் (ஏப்.21 முதல் 23 வரை) மதுக்கடைகளை மூட உத்தரவிட்டது. நேற்று காலை 10 மணி முதல் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த இரு தினங்களாக மதுக்கடைகளில் கூட்டம் அலைமோதின.

குடிமகன்கள் அதிகளவில் மதுபானங்களை வாங்கி சென்ற நிலையில், கடத்தலை தடுக்கும் வகையில் மாநில எல்லைகளான கோரிமேடு, கனகசெட்டிகுளம், மதகடிப்பட்டு, கன்னியகோயில் உள்ளிட்ட பகுதிகளில் பறக்கும் படைகள் விடியவிடிய சோதனையில் இறங்கின. இதையடுத்து, இந்த கடைகளை திறக்காமல் இருக்கும் வகையில், காலை 10 மணியிலிருந்து மதுக்கடைகளை கண்காணித்த கலால்துறை தாசில்தார் ராஜேஷ் கண்ணா தலைமையிலான 15 குழுக்களை கொண்ட அதிகாரிகள், புதுச்சேரியிலுள்ள 443 மதுபான கடைகள், 37 மதுபான குடோன்கள் மற்றும் 83 சாராய கடைகளுக்கு அதிரடியாக சீல் வைத்தனர். இதேபோல் காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள மதுபான, சாராய கடைகளும் சீல் வைக்கப்பட்டது.

இருப்பினும் தடை உத்தரவை மீறி புதுச்சேரியில் ஆங்காங்கே மதுபானங்களை கள்ளத்தனமாக விற்ற 7 பேர் பிடிபட்டனர். அவர்களிடமிருந்து மதுபாட்டில்கள், சாராயம், பைக்குகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதேபோல் புதுச்சேரி, காரைக்கால் முழுவதும் போலீசார் தீவிர ரோந்து பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மதுபான, சாராய கடைகளை கலால்துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது

# தேர்தல் நடத்தை விதிகளை மீறி வாக்காளர்களுக்கு ரூ.8 ஆயிரம் கூப்பன் விநியோகித்த திமுகவினர் மீது வழக்குப் பதிவு



சென்னை, ஏப்.23-
தேர்தல் நடத்தை விதிகளை மீறிவாக்காளர்களுக்கு ரூ. 8 ஆயிரத்துக்கான கூப்பன்களை விநியோகித்த திமுகவினர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருவதாக, தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்து, வழக்கை முடித்து வைத்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் கோவை தெற்கு, பாலக்கோடு, பர்கூர், அண்ணாநகர் மற்றும் கும்பகோணம் உள்ளிட்ட பெரும்பாலான தொகுதிகளில் திமுகவினர் ரூ. 8 ஆயிரத்துக்கான கூப்பன்களை தேர்தல் நடத்தை விதிகளை மீறி சட்டவிரோதமாக விநியோகித்து வருவதாகக் கூறி, அதிமுக வழக்கறிஞரணி துணைச் செயலாளரான ஆர்.ஏ.எஸ்.செந்தில்வேல் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அதில், ``திமுக ஆட்சிக்கு வந்தால்ரூ.8 ஆயிரத்துக்கான கூப்பன் வழங்கப்படும் என்றும், இதன் மூலம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம் என்றும் தேர்தல் வாக்குறுதி அளித்துள்ளது. இந்த வாக்குறுதியை வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தால் மட்டுமேசெயல்படுத்த முடியும்.

ஆனால், திமுகவினர் கோவை தெற்கு, பர்கூர், பாலக்கோடு, அண்ணாநகர், கும்பகோணம் உள்ளிட்ட பல்வேறு தொகுதிகளில் வாக்காளர்களை ஏமாற்றும் வகையில் ரூ. 8 ஆயிரத்துக்கான பரிசுக் கூப்பன்களை வழங்கி தேர்தல் நடத்தை விதிமீறலில் ஈடுபட்டு வருகின்றனர்.

முதல்வரின் புகைப்படம் மற்றும் வரிசை எண்ணுடன் கூடிய இந்த கூப்பன்களை சில தொகுதிகளில் வேட்பாளர்களே நேரடியாக வாக்காளர்களுக்கு விநியோகித்து வருகின்றனர். இது தொடர்பாக, ஆதாரங்களுடன் புகார் அளித்தும் தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட திமுக வேட்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், விநியோகிக்கப்பட்ட பரிசு கூப்பன்களை பறிமுதல் செய்யவும் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்'' எனக் கோரியிருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில், ``திமுக சார்பில்வாக்காளர்களுக்கு ரூ. 8 ஆயிரம் கூப்பன் விநியோகம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்ட கட்சிக்கும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது'' என தெரிவிக்கப்பட்டது. அதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்

# ஆயிரம் விளக்கு பகுதியில் அதிமுக வேட்பாளருக்கு ஆதரவு திரட்டியவர்களை தாக்கி வழிப்பறி செய்த 3 பேர் கைது

சென்னை, ஏப்.23-

ஆயிரம் விளக்கு பகுதியில் அதிமுக வேட்பாளருக்கு ஆதரவு திரட்டியவர்களைத் தாக்கி வழிப்பறி செய்த 3 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

திருச்சி மாவட்டம், பாலக்கரையைச் சேர்ந்தவர் வினோத்குமார் (34). இவர் கடந்த 19ம் தேதி இரவு அவரது நண்பர்கள் சுரேந்தர் மற்றும் கவுதம் ஆகியோருடன் ஆயிரம் விளக்கு பகுதியில் அதிமுக வேட்பாளரான பா.வளர்மதிக்கு ஆதரவாக வீடு வீடாக துண்டுப் பிரசுரம் வழங்கினார்.

அப்போது அங்கு வந்த 4 பேர், ‘பணம் கொடுத்து வாக்காளர்களை கவர



நினைக்கிறீர்களா?’ எனக் கூறி தனியாக அழைத்துச் சென்று தாக்கி அவர்கள் வைத்திருந்த ரூ.10,300, ஜிபே மற்றும் ஏடிஎம் கார்டு மூலம் ரூ.50,000 என மொத்தம் ரூ.60,300ஐ பறித்துவிட்டு தப்பினர்.

இதுகுறித்து தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் வினோத் குமார் மற்றும் நண்பர்களைதாக்கி வழிப்பறியில் ஈடுபட்டதாக தேனாம்பேட்டை நல்லான் தெருவைச் சேர்ந்த சதீஷ் (25), அதே பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் (28) மற்றும் கிண்டி லேபர் காலனி 4வது தெருவைச் சேர்ந்த சந்திரன் (23) ஆகிய 3 பேரை நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர். தலைமறைவாக உள்ள மேலும் ஒருவரை தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்.

# தமிழக உள் மாவட்டங்களில் ஏப்.26 வரை 5 டிகிரி வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு

சென்னை, ஏப்.23-

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் 26ம் தேதி வரை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அளவு வரை வெப்பம் அதிகரிக்கும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வட தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

மரத்வாடா முதல் குமரிக்கடல் வரை உள் கர்நாடகா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக, (ஏப்.23) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென்தமிழக கடலோர மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

24ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில்



ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், 25 முதல் 28ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் 26ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையில் 5 செமீ, சிற்றாறு, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஏவுகணை தயாரிக்க உதவும் ரசாயனங்களை ஈரானுக்கு அனுப்பிய சீனா

வாஷிங்டன், ஏப்.23-

ஏவுகணைகள் தயாரிக்க உதவும் ரசாயனங்களை ஈரானுக்கு சீனா அனுப்பியுள்ளது என்று அமெரிக்காவிலுள்ள குடியரசுக் கட்சியின் நிர்வாகி நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார். மேலும் இதற்கான ஆதாரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார். அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து முடங்கியுள்ளது. இந்நிலையில் அமெரிக்காவுக்கான ஐ.நா. தூதராக பணியாற்றியவரும், தற்போது அதிபர் டொனால்டு ட்ரம்ப் சார்ந்த குடியரசு கட்சியின் நிர்வாகியுமான நிக்கில ஹாலே எக்ஸ் சமூக வலைதளத்தில் சில ஆதாரங்களை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: சிறை பிடிக்கப்பட்ட கப்பலில் இருந்து ஏவுகணைகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் மிக முக்கியமான ரசாயனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



இது சீனாவிலிருந்து ஈரானுக்கு ரகசியமாக அனுப்பி வைக்கப்பட்டவை. இதுதொடர்பான சில புகைப்படங்கள் மற்றும் ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளேன்.ஈரான் தனது ரகசியத் திட்டங்களை மறைப்பதற்காக சீனாவைப் பயன்படுத்திக் கொள்கிறதா என்ற கேள்வி எழுகிறது. கப்பலில் இருந்த ரசாயனப் பொருட்கள் சீன நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டதற்கான முத்திரைகள் இருக்கின்றன. இதன் மூலம் உலக நாடுகளை ஈரான் ஏமாற்றி வருகிறது.

ஈரானின் இந்த நடவடிக்கை அணுசக்தி ஒப்பந்தத்தை மீறுவது மட்டுமல்லாமல், உலக அமைதிக்கே ஒரு மிகப் பெரிய சவாலாக உள்ளது. அமெரிக்காவின் நட்பு நாடுகளை அச்சுறுத்தும் வகையில் ஈரான் தனது ஏவுகணைத் திட்டத்தை வலுப்படுத்தி வருவதை அமெரிக்கா ஒருபோதும் அனுமதிக்காது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்த அதிரடி சோதனை மற்றும் கப்பல் சிறைபிடிப்பு நடவடிக்கைக்கு ஈரான் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், நிக்கி ஹாலேயின் இந்த அறிவிப்பு ஈரான் நாட்டுக்கு மேலும் நெருக்கடியை கொடுத்துள்ளது.அதே நேரத்தில், அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டுகளை ஈரான் முற்றிலும் மறுத்துள்ளது. அமெரிக்கா திட்டமிட்டு ஒரு நாடகத்தை அரங்கேற்றி வருவதாகவும், அந்தக் கப்பலில் சாதாரணமான வணிகப் பொருட்கள் மட்டுமே இருந்ததாகவும் ஈரான் தரப்பில் விளக்கம் தரப்பட்டுள்ளது. நிக்கி ஹாலேவின் கூற்றுக்கு சீன நாடும் மறுப்பு தெரிவித்துள்ளது

# கோடை வெயிலின் தாக்கத்தால் புதுச்சேரியில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிப்பு!

புதுச்சேரி, ஏப்.23-

கோடை வெயிலால் புதுச்சேரி, காரைக்கால், ஏனாமில் உள்ள பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளி, தனியார் பள்ளிகளுக்கு ஏப்.27 முதல் விடுமுறை. கோடை விடுமுறைக்குப் பின் ஜூன் 1ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது

# செல்வப்பெருந்தகை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்: காவல் ஆணையரிடம் வருமான வரித்துறை புகார்

சென்னை, ஏப்.23-

தவறான தகவல்களை வெளியிட்ட செல்வப்பெருந்தகை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என சென்னை காவல் ஆணையரிடம் வருமான வரித்துறை புகார் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய நிதி அமைச்சகத்தின் வருவாய்த் துறை மத்திய நேரடி வரிகள் வாரியம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:தமிழக காங்கிரஸ் தலைவரும் பெரும்புதூர் சட்டப்பேரவை தொகுதி வேட்பாளருமான செல்வப்பெருந்தகை கடந்த 20ம் தேதி ‘எக்ஸ்’ வலைதளத்தில் வெளியிட்ட பதிவு ஒன்று வருமான வரித் துறையின் கவனத்துக்கு வந்துள்ளது.

அதில், ‘வருமான வரித்துறை அதிகாரிகள்



சோதனை’ என்ற பெயரில், தன்னைத் தொகுதிக்குள் சட்டவிரோதமாக அடைத்து வைத்ததாகவும், தனது அரசியல் பணிகளைச் செய்வதற்கும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கும் தடையாக இருந்ததாகவும் அவர் குற்றம்சாட்டியிருந்தார்.இதே குற்றச்சாட்டுகளை அவர் அன்றைய தினம் செய்தியாளர் சந்திப்பின் போதும் மீண்டும் தெரிவித்திருந்தார். மேலும், சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள செல்வப்பெருந்தகை இல்லத்தில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தியதாக சில ஊடகங்களும் செய்தி வெளியிட்டிருந்தன. இந்த தகவல்கள் ஆய்வு செய்யப்பட்டது.குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை: இதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் முற்றிலும் ஆதாரமற்றவை மற்றும் உண்மையற்றவை. கடந்த 20ம் தேதி அன்றோ அல்லது அதற்கு சமீபத்திய தேதிகளிலோ செல்வப்பெருந்தகைக்கு எதிராக வருமான வரித்துறையினரால் எந்தவிதமான சோதனையோ ஆய்வோ அல்லது அமலாக்க நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை என்பதை தெளிவுபடுத்துகிறோம்.

மேலும், அவரது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள அவரது இல்லம் உட்பட எந்தவொரு இடமும், வருமானவரித் துறையின் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. கணக்கில் வராத பணம் கொண்டு செல்லப்படுவதாகக் கிடைத்த குறிப்பிட்ட உளவுத் தகவல்களின் அடிப்படையில் ஸ்ரீபெரும்புதூரின் சில பகுதிகளில் வருமானவரித் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட வரம்புக்குட்பட்ட சரிபார்ப்புப் பணிகள் முறையான அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டன.இதற்கும் செல்வப்பெருந்தகைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்தச் சரிபார்ப்பு நடவடிக்கைகளில் மேல் நடவடிக்கை எடுப்பதற்கான ஆதாரங்கள் ஏதும் கிடைக்கவில்லை. மேலும் இந்த நடவடிக்கை தனிப்பட்ட முறையில் எவரையும் பாதிக்கவில்லை. செல்வப்பெருந்தகை கூறியுள்ள தவறான மற்றும் தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்கள் குறித்து இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.கூடுதலாக தவறான தகவல்களைப் பரப்பியது மற்றும் அரசுத் துறை மீது அவதூறான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க கோரி சென்னை காவல் ஆணையரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது



# மேற்கு வங்க முதல் கட்ட தேர்தல் பிரச்சாரம் நிறைவு: 152 தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு

கொல்கத்தா, ஏப்.23-

மேற்குவங்க முதல் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது. அந்த மாநிலத்தின் 152 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நாளை வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

மேற்குவங்கத்தில் மொத்தம் 294 சட்டப் பேரவைத் தொகுதிகள் உள்ளன. இந்த தொகுதிகளுக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட உள்ளது. முதல் கட்டத்தில் 152 தொகுதிகளுக்கு நாளை வாக்குப்பதிவு நடத்தப்பட உள்ளது. இந்த தொகுதிகளில் நேற்று மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைந்தது. மொத்தம் 1,478 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 3.60 கோடி பேர் வாக்குரிமை பெற்று உள்ளனர்.

தேர்தல் பிரச்சாரத்தின் போது ஆளும் திரிணமூல் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் பாஜக தொண்டர்களுக்கும் இடையே பல்வேறு இடங்களில் மோதல்கள் நடைபெற்றன. இதை கருத்தில் கொண்டு முதல் கட்ட தேர்தலில் மத்திய பாதுகாப்புப் படைகளை சேர்ந்த 2.4 லட்சம் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். பாஜக மூத்த தலைவர் சுவேந்து அதிகாரி போட்டியிடும் நந்திகிராம் தொகுதியில் நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அந்த தொகுதியில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. முதல்கட்ட தேர்தல் நடைபெறும் பகுதிகளில் இன்றும் நாளையும் இரவு 6 மணி முதல் காலை 6 மணி வரை மோட்டார் சைக்கிள்கள் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது.மேலும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மோட்டார் சைக்கிள்களில் ஒருவர் மட்டுமே பயணம் மேற்கொள்ள வேண்டும். பின் இருக்கையில் யாரையும் ஏற்றக்கூடாது என்று தேர்தல் ஆணையம் கண்டிப்புடன் உத்தரவிட்டுள்ளது. மருத்துவ தேவை, குடும்ப விழாக்கள், பள்ளிகளுக்கு மாணவ, மாணவியரை அழைத்துச் செல்வது ஆகிய பணிகளுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. இதே போல வீட்டு உபயோக பொருட்கள், உணவு வகைகளை விநியோகம் செய்யும் ஊழியர்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டு உள்ளது.



# கரூர் கிருஷ்ணராயபுரம் தொகுதியில் விநியோகிக்க வைத்திருந்த 52 குக்கர்கள் பறிமுதல்

கரூர், ஏப்.23-

கிருஷ்ணராயபுரம் தொகுதி புலியூரில் அதிமுக வேட்பாளருக்கு ஆதரவாக குக்கர் விநியோகம் செய்யப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து, விசாரணை மேற்கொண்ட பறக்கும் படையை கண்டதும் சம்பந்தப்பட்டவர்கள் குக்கர்களை கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். தப்பிடியோடியவர்கள் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் (தனி) தொகுதியில் அதிமுக வேட்பாளராக மருத்துவர் எஸ்.திவ்யா போட்டியிடுகிறார். அவருக்கு ஆதரவாக புலியூர் பகுதியில் இன்று (ஏப்.22) வீடு, வீடாக வாக்காளர்களுக்கு குக்கர் வழங்கப்பட்டு வருவதாக பறக்கும் படையினருக்கு தகவல் கிடைத்தது.

பறக்கும் படையினர் சம்பவ இடத்துக்குச் சென்ற நிலையில், குக்கர்களை விநியோகம் செய்தவர்கள் புலியூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் இருக்கும் தனியார் தோட்டத்துக்குள் 52 குக்கர்களை போட்டுவிட்டு தப்பியோடி விட்டனர்.

இதையடுத்து, பறக்கும் படையினர் 52 குக்கர்களை பறிமுதல் செய்து மினி வேனில் ஏற்றி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து தப்பிடியோடியவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், புரவிபாளையம் பகுதியில் ஒரு வீட்டில் 100 குக்கர் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக வந்த தகவலை அடுத்து அங்கு சோதனையிட சென்றனர். வீடு பூட்டப்பட்டிருந்ததால் அங்க சோதனை நடத்த காத்திருந்தனர்.

அப்போது அப்பகுதியைச் சேர்ந்தவர்கள், ‘இங்கு மட்டும்தான் சோதனையிடுவீர்களா? வேறு சில இடங்களில் வேட்டி, சேலை வழங்குகின்றனர். அங்கு சோதனையிட மாட்டீர்களா?’ என வாக்குவாதம் செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

# தேனி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக விழிப்புணர்வு பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் அவர்கள் தொடங்கி வைத்தார்

தேனி ஏப்.23-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக தேனி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு வாக்காளர்களிடையே 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் பணிபுரியும் களப்பணியாளர்கள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார் தொடங்கி வைத்தார்.




தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. வாக்காளர்கள் அனைவரும் 100% வாக்களிப்பை உறுதி செய்வதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து இருசக்கர வாகனப் பேரணிகள், கையெழுத்து இயக்கம், சுவரொட்டி விளம்பரம், துண்டுப்பிரசுரம் வழங்குதல், ரங்கோலி, நடைபயணப் பேரணி, மனித சங்கிலி, தெருநாடகம், ராட்சத பலூன், விளம்பரப் பதாகைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்றையதினம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் பணிபுரியும் களப்பணியாளர்கள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பேரணியானது, தேனி ஊராட்சி அலுவலகம் முன்பு தொடங்கி இரயில்வேகேட் வரை சென்று நிறைவு பெற்றது. இப்பேரணியில், 150க்கும் மேற்பட்ட களப்பணியாளர்கள் கலந்து கொண்டு, தேர்தல் தொடர்பான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சந்திரா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், வட்டார வளர்ச்சி அலுவலர் ரவிச்சந்திரன் மற்றும் உதவி திட்ட அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் வாக்காளர் விழிப்புணர்வு வீடியோ படக்காட்சி செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அதிநவீன மின்னணு வாகன மூலம் மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் ஒளிபரப்பு நடத்தப்பட்டபோது



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் சோழவந்தான் தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடேசனை ஆதரித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் அலங்காநல்லூர் பேருந்து நிலையத்திலிருந்து கேட்டுகடை வரை பொதுமக்களிடம் துண்டு பிரசுரம் வழங்கி உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தனர்.இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், திருமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 195ருதிருப்பரங்குன்றம் சட்டமன்றம் மற்றும் 196ருதிருமங்கலம் சட்டமன்றம் ஆகிய தொகுதிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு, அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

# “எங்களுக்கு மீன் வேண்டாம், மீன் பிடிக்கக் கற்றுக் கொடுங்கள்!”

## இலவச அறிவிப்புகள் விண்ணைத் தொடுகின்றன

கட்டப்பா: என்ன செல்லப்பா... தேர்தல் நெருங்கிருச்சு, ஒரு கட்சி வாஷிங் மெஷின் தாரேன்றாங்க, இன்னொருத்தர் மாசம் ரெண்டாயிரம் தாரேன்றாங்க. நமக்கு இந்த வருஷம் நல்ல 'அறுவடை' போல?

செல்லப்பா: (சிரித்துக் கொண்டே) கட்டப்பா அண்ணே... இந்த இரண்டாயிரமும், இலவசப் பொருட்களும் நம்ம வாழ்க்கையை மாத்திருமா? என்னைக்காவது யோசிச்சிருக்கீங்களா?

கட்டப்பா: ஏன் மாத்தாது? காசு மிச்சமாகுமில்ல?

செல்லப்பா: நீங்க மிச்சம் பிடிக்கிற அந்தச் சொற்பக் காசை விட, உங்க புள்ளையோட படிப்புக்கும், உங்க வீட்டுப் பெரியவங்களோட மருத்துவத்துக்கும் நீங்க செலவு பண்ற காசு எவ்வளவு தெரியுமா? எங்களுக்கு 'இலவசங்கள் வேண்டாம், தரமான கல்வியும், மருத்துவமும் கொடுங்க'ன்னு நாம ஏன் கேக்குறது இல்ல?



கட்டப்பா: அது கிடைச்சா நமக்கு என்ன கிடைக்கும்னு நினைக்கிற?

செல்லப்பா: நிறைய மாறும் அண்ணே!

தரமான கல்வி கிடைச்சா, உங்க புள்ளை வெறும் பட்டதாரி மட்டும் ஆகமாட்டான், உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பம் கத்துக்குவான். படிச்சு முடிச்சதும் பத்தாயிரம் சம்பளத்துக்குக் காத்திருக்காம, அவனே ஒரு தொழிலைத் தொடங்குற அளவுக்கு அவனோட அறிவுத் திறன் வளரும். அதுதான் 'சுயசார்பு'.

தரமான மருத்துவம் கிடைச்சா, அந்த மூவாயிரத்தை வச்சு உன் பையனை ஒரு பெரிய டாக்டராவோ, இன்ஜினியராவோ ஆக்க முடியுமா? இல்ல உனக்கு ஒரு உடம்பு சரியில்லன்னா, பெரிய ஆஸ்பத்திரியில லட்சக்கணக்குல செலவாகுறதை அந்த காசு தடுத்துருமா? ஒரு காய்ச்சலோ, சின்ன விபத்தோ வந்தா தனியார் ஆஸ்பத்திரிக்கு ஓடி லட்சக்கணக்குல கடன் வாங்க வேண்டியதில்லை. அரசு மருத்துவமனையிலேயே எல்லா வசதியும் இருந்தா, உங்க உழைப்புப் பணம் மொத்தமும் உங்களுக்கே மிச்சமாகும்.

கட்டப்பா: நீ சொல்றது சரிதான்... ஆனா இதுக்கும் நாம சுயசார்பு அடையுறதுக்கும் என்ன சம்பந்தம்?

செல்லப்பா: நாம 'இலவசம்' வேணும்னு கேக்குற வரைக்கும் அவங்க இதைக் கொடுக்க மாட்டாங்க கட்டப்பா. 'எங்களுக்கு இலவசம் வேண்டாம், உரிமையைக் கொடுங்க'ன்னு என்னைக்கு நாம கேக்குறோமோ, அன்னைக்குத்தான் நம்ம வாழ்க்கை மாறும். படிச்ச அறிவும், ஆரோக்கியமான உடம்பும் இருந்தா, நாம யாருக்கிட்டயும் கையேந்தத் தேவையில்லை. அதுதான் உண்மையான சுதந்திரம்! நமக்கான வாய்ப்பை நாமளே உருவாக்கிப்போம். நம்ம ஊரு இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சி கிடைச்சா, அவங்க வெளிநாட்டுக்கும், வெளி மாநிலத்துக்கும் வேலை தேடிப் போகத் தேவையில்லை. இங்கேயே உற்பத்தியைப் பெருக்குனா?...

கட்டப்பா: ஆமாம் செல்லப்பா... மீனைத் தின்னா ஒரு நாள் பசிதான் தீரும். ஆனா மீன் பிடிக்கக் கத்துக்கிட்டா வாழ்க்கை முழுக்க பசியே இருக்காதுன்னு சொல்லுவாங்க. அதுமாதிரி தரமான கல்வி கிடைச்சா எங்க குடும்பமே சொந்தக் கால்ல நிக்கும்.

செல்லப்பா: அதுதான் அண்ணே உண்மை. இலவசங்கள்ங்கிறது போதை மாதிரி, அப்போதைக்குத் தித்திக்கும். ஆனா கல்வி, மருத்துவம்ங்கிறது ஒரு விதை மாதிரி. அது வளர்ந்து தலைமுறையையே காக்கும். இந்தத் தேர்தல்ல நம்ம வாக்கு இதைப் புரிஞ்சுக்கிட்டு விழணும்!

மக்களுக்குப் பொருட்களைத் தந்து அவர்களைப் பயனாளிகளாகவே வைத்திருப்பதை விட, தரமான சேவைகளை வழங்கி அவர்களைச் சாதனையாளர்களாக மாற்றுவதே உண்மையான ஜனநாயகம். அரசியல் கட்சிகள் சிந்திக்கட்டும்! மக்கள் விழிப்புணர்வு பெறட்டும்!

# வாக்களிக்க சொந்த ஊர் செல்ல வசதியாக சென்னையில் இருந்து மதுரைக்கு முன்பதிவில்லா ரயில் இயக்கம்

சென்னை, ஏப்.23-

தேர்தலில் வாக்களிக்க சொந்த ஊருக்கு சென்று திரும்பும் பயணிகள் வசதிக்காக, சென்னையில் இருந்து மதுரைக்கு முன் பதிவில்லா சிறப்பு ரயில் இன்று இயக்கப்படுகிறது. போத்தனூருக்கும் சிறப்பு ரயில் அறிவிக்கப்பட்டுள்ளது.சென்னை எழும்பூரில் இருந்து இரவு 11.55 மணிக்கு சிறப்பு ரயில் (06179) புறப்பட்டு, மறு நாள் காலை 9.30 மணிக்கு போத்தனூரை சென்றடையும். இந்த ரயில் பெரம்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர் வழியாக போத்தனூரை அடையும்.

சென்னை எழும்பூரில் இருந்து இரவு 9.55 மணிக்கு முன்பதிவில்லாத மெமு சிறப்பு ரயில் (06161) புறப்பட்டு, மறு நாள் காலை 8.45 மணிக்கு மதுரையை சென்றடையும்.



இந்த ரயில் தாம்பரம், செங்கல்பட்டு, மேல்மருவத்தூர், விழுப்புரம், பண்ருட்டி, கடலூர் துறைமுகம், சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை, பேரளம், திருவாரூர், நீடாமங் கலம், தஞ்சாவூர், திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல், கொடைக்கானல் ரோடு வழியாக மதுரையை சென்றடையும்.மதுரையில் இருந்து ஏப்.23ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு மெமு முன் பதிவில்லாத விரைவு ரயில் (06162) புறப்பட்டு, அதே நாள் இரவு 11 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும். இந்த ரயில் கொடைக்கானல் ரோடு, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, அரியலூர், விருத்தாசலம், விழுப்புரம், செங்கல்பட்டு வழியாக தாம்பரத்தை வந்தடையும்.எழும்பூர் போத்தனூர் சிறப்பு ரயிலுக்கான (06179) டிக்கெட் முன்பதிவு காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.400 குறைவு: இன்றைய சந்தை நிலவரம் என்ன?

சென்னை, ஏப்.23-

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சென்னையில் இன்று பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்தது. அதே நேரத்தில் இன்று வெள்ளி விலையில் மாற்றம் ஏதுமில்லை.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் தங்கம் விலை மீது தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையேயான போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பகிர்ந்துள்ளார்.இந்நிலையில், தங்கம் விலை இன்று குறைந்துள்ளது. சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.50 மற்றும் பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்தது. இதனால் ஒரு கிராம் தங்கம் ரூ.14,250க்கும், ஒரு பவுன் ரூ.1,14,000க்கும் விற்பனை ஆகிறது.24 காரட் தங்கம் இன்று பவுனுக்கு ரூ.432 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,24,368க்கும், 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.408 குறைந்து, ஒரு பவுன் ரூ.94,432க்கும் விற்பனை ஆகிறது. வெள்ளி விலை இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.275, ஒரு கிலோ ரூ.2,75,000க்கும் விற்பனை ஆகிறது












# மணிப்பூர் கலவரம் காரணமாக இதுவரை 58,821 பேர் இடம்பெயர்வு

## 217 பேர் உயிரிழப்பு

இம்பால், ஏப்.23-

2023ஆம் ஆண்டு மே 3ஆம் தேதி இனக்கலவரம் வெடித்தது முதல் இந்த ஆண்டு மார்ச் 30 வரையிலான காலகட்டத்தில், மணிப்பூரில் மொத்தம் 58,821 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும், 217 பேர் உயிரிழந்துள்ளதாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.மணிப்பூர் காங்கிரஸ் தலைவர் ஹரேஷ்வர் கோஸ்வாமி தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவுக்குப் பதிலளிக்கும் விதமாக, ஏப்ரல் 20 அன்று உள்துறைச் செயலகம் இந்தப் புள்ளிவிவரங்களை வழங்கியது.மே 2023 முதல் இனக்கலவரம் தொடர்பாக உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை குறித்துப் பதிலளித்த அத்துறை, ‘உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்ட கருணைத் தொகையின் அடிப்படையில் இதுவரை 217 பேர் உயிரிழந்துள்ளனர்’ என்று குறிப்பிட்டது.மார்ச் 10, 2026 நிலவரப்படி மணிப்பூரில் நிவாரண முகாம்களின் எண்ணிக்கை 174 ஆக இருந்ததாகவும், அதே வேளையில் மணிப்பூர் காவல் துறை வீட்டு வசதி வாரியக் கழகத்தால் 3,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்தது. இனக் கலவரத்தால் மே 3, 2023 முதல் 7,894 நிரந்தர வீடுகள் முழுமையாகவும், 2,646 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளதாகவும் உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தகவல்கள் வெளியான பின்னர் மணிப்பூர் காங்கிரஸ் தலைவர் ஹரேஷ்வர் கோஸ்வாமி வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் குறித்த தகவல்களைப் பெறுவதற்குத் தனக்கு ஏழு மாத கால முயற்சி தேவைப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பள்ளத்தாக்குப் பகுதியைச் சேர்ந்த மேதி சமூகத்தினருக்கும், மலை மாவட்டங்களில் வசிக்கும் குக்கி சமூகத்தினருக்கும் இடையே மே 2023இல் வெடித்த இனக்கலவரம் 2 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது.தற்போம் கூட அம்மாநிலத்தில் அங்காங்கே வெடிக்கும் வன்முறையால், அவ்வப்போது பதற்றமான சூழல் உருவாகி வருகிறது என்பது கவனிக்கத்தக்கது.

# ஓசூர்: தேர்தலில் வாக்களிக்க பெங்களூருவிலிருந்து காரில் திரும்பியபோது விபத்து

## 3 இளைஞர்கள் உயிரிழப்பு

ஓசூர், ஏப்.23-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே சானமாவு வனப்பகுதியில் இன்று அதிகாலை நிகழ்ந்த கோர விபத்தில், பெங்களூரில் இருந்து தேர்தலில் வாக்களிக்க ஊர் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் வீரமணி (25) என்பவர் சிப்ஸ் கடை நடத்தி வந்தார். அவருடன் அதே பகுதியில் உள்ள சிப்ஸ் கடைகளில் வேலை செய்து வந்த பிரதீப் மற்றும் மாரி, சதீஷ் குமார் ஆகியோர் தமிழகத்தில் நடைபெற்ற வரும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தங்களது சொந்த ஊரான பென்னாகரத்திற்கு காரில் புறப்பட்டுள்ளனர்.இன்று அதிகாலை சுமார் 4 மணி அளவில், ஓசூர் அருகே உள்ள சானமாவு வனப்பகுதி வழியாக கார் சென்று கொண்டிருந்தது. அப்போது உடுமலைபேட்டையில் இருந்து ஓசூர் நோக்கி வந்த தனியார் சொகுசு



பேருந்தும், காரும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த பயங்கர மோதலில் கார் அப்பளம் போல் நொறுங்கியது. காரில் பயணம் செய்த வீரமணி (25), பிரதீப், மாரி ஆகிய மூன்று இளைஞர்களும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். இவர்களுடன் பயணித்த சதீஷ் குமார் (25) என்பவர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார். அவர் தற்போது சிகிச்சைக்காக ஓசூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த உத்தனப்பள்ளி போலீஸார், உயிரிழந்தவர்களின் உடல்களைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஓசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தேர்தலில் வாக்களிக்க ஆர்வத்துடன் ஊருக்குச் சென்ற இளைஞர்கள் விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000